10/=

பக்கங்கள் 08

Registered as a Newspaper in Srilanka

# எதிரொலி

Ethiroli

குரல் 01 அதிர்வு 229 திங்கட்கிழமை ஜனவரி 08 2018 ethirolimedia@gmail.com 021 224 38 18 / 021 300 48 48

## பட்டம் விட்ட இளைஞர் மின்சாரம் தாக்கிப் பலி

யாழ்ப்பாணம், ஜன. 08

பட்டம் பறக்க விட்ட இளைஞர் மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். இரவு வேளையில் பட்டம் ஒளிர மின்குமிழ்கள் பொருத்தப்பட்டிருந்தது. இதற்கு மின்சாரம் வழங்க இணைத்த மின் வடம் வீதியின் மின் கம்பியுடன் உரசியதாலேயே இந்தச் சோகம் இடம்பெற்றது.

நேற்று மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மீசாலையைச் சேர்ந்த 06▶



# நாடாளுமன்றை உடன் கூட்டுங்கள்!

## சபாநாயகருக்கு பிரதமர் உத்தரவு

கொழும்பு, ஜன. 08

நாடாளுமன்ற கூட்டத் தொடரை உடன் கூட்டுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சபாநாயகருக்கு உத்தரவிட்டுள்ளார். மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பான ஜனாதிபதி ஆணைக் குழுவின அறிக்கை தொடர்பில் விவாதிக்கவே இந்த உத்தரவைப் பிரதமர் நேற்றுப் பிறப்பித்தார். 06▶

## பொறுப்பில் தவறினார் பிரதமர்! ஜனாதிபதி பதிலளிக்க வேண்டும்



கொழும்பு, ஜன. 08

பிணை முறி மோசடி தொடர்பில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உடன் நிறைவேற்றி குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும். ஊடகங்களின் தொடர் போராட்டமே அறிக்கை வெளிவரக் காரணம் என கோப் குழுவின் முன்னாள் தலைவரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார். 06▶

## என் மீது ஊடகங்கள் பழி சுமத்துகின்றன

### சுமந்திரன் எம்.பி. காட்டம்



யாழ்ப்பாணம், ஜன. 08

"ஊடகங்கள் செய்யும் தவறுகளை நான் அண்மைக் காலமாக சாடி வருகிறேன். இதில் வெற்றியும் கண்டிருக்கிறேன். சில தினங்களாக என் மீது ஊடகங்கள் பழி சுமத்தி வருகின்றன. நான் பாவித்த 06▶

## போராட்டம், அதன் வலிகளை அறியாதவரே சுமந்திரன் எம்.பி

### சுரேஸ் பிறேமச்சந்திரன் சாடல்



வவுனியா, ஜன. 08

"சுமந்திரன் எம்.பி. போராட்டத்தையும் அதன் வலியையும் அறியாதவர். அவரே தமிழர்களுக்கு விரோதமாக செயற்படுகிறார்."

- இவ்வாறு சாடியிருக்கிறார் தமிழ்த 06▶

## கண்ணீர் வடித்த மகிந்த ராஜபக்ச



கொழும்பு, ஜன. 08

மகிந்த ராஜபக்ச தனது நெருங்கிய நண்பரிடம் தன் ஆதங்கங்களைக் கூறி கண் கலங்கினார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரபல சிங்கள நடிகர் ஸ்ரீஜயந்த மெண்டிஸை சந்தித்தபோதே மகிந்த ராஜபக்ச இவ்வாறு கண்ணீர் வடித்தார் எனக் கூறப்படுகின்றது. தனது மகளின் திருமணத்துக்காக அழைக்கச் சென்ற மெண்டிஸிடமே தனக்குள்ள மனக்காயங்களை முறையிட்டு அழுதார் எனக் கூறப்படுகின்றது.

மெண்டிஸின் மகளின் திருமண நிகழ்வு கடந்த 4 ஆம் திகதி கொழும்பு கிங்ஸ்பெரி விடுதியில் இடம்பெற்றது. இதில் மகிந்த ராஜபக்ச பங்கேற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ச)



## சுதந்திர தின நிகழ்வில் இளவரசர் எட்வேர்ட்

கொழும்பு, ஜன. 08

இலங்கையின் 70 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தில் பிரித்தானிய இளவரசர் எட்வேர்ட் பங்கேற்கவுள்ளார் எனக் கூறப்படுகின்றது. 06▶



## மாவீரர்களின் தியாகங்களையும் அரசியலாக்குகிறது கூட்டமைப்பு

கிளிநொச்சி, ஜன. 08

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி உயிர்நீத்த மாவீரர்களையும் முன்னாள் போராளிகளையும் பயன்படுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசியல் நடத்துகிறது எனக் குற்றஞ்சாட்டியுள்ளார் முன்னாள் போராளியான 06▶

## தீர்வு மாயையைக் காட்டி வாக்கைச் சூறையாட முயற்சி



யாழ்ப்பாணம், ஜன. 08

"அரசியல் தீர்வு என்ற மாயையைக் காண்பித்து தமிழ் மக்களின் வாக்குகளைச் சூறையாடத் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் முயற்சிக்கின்றனர். ஆனால் தமிழ் மக்களை நீண்ட காலத்துக்கு முட்டாளாக்க முடியாது என்பதனை அவர்கள் உணர வேண்டும்"

- இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளர் சட்டத்தரணி கனகரட்ணம் சுகாஷ் தெரிவித்தார்.

"தமிழ் மக்களின் விடிவுக்காக நாம் தொடர்ந்து முயற்சிகளை முன்னெடுக்க மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். இதுவரையில் மக்களின் ஆணை தமிழ்த் தேசியக் 06▶



உங்களுடைய இலக்கங்களை எங்களுக்கு வழங்குங்கள்

உங்களுடைய வியாபாரத்துடன் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்துவோம்

பல்வேறு வழிகளில் உங்களின் தகவல்களை அனுப்பலாம்

- த.பெ.எண் 2333 கொழும்பு முகவரிக்கு தபால் அட்டை அனுப்பவும்.
- இ-மெயில் info@rainbowpages.lk
- rainbowpages.lk சென்று Register your business இல் பதிவு செய்யவும்.
- 0712399399 இலக்கத்துக்கு sms,viber or whatsapp இற்கு மெசேஜ் பண்ணவும்
- விபரங்களை 011 2391888 பெக்ஸ் செய்யவும்.

SLT ரெயின்போ பேஜஸில் இலவசமாக பதிவு செய்து வியாபாரத்தை விரிவுபடுத்துங்கள்.

SLT RAINBOW PAGES

Print & Digital Directories

உங்களின் வளமான வியாபாரத்திற்கு கைகொடுக்கும் SLT டெலிகொம்.

# ஆசியாவின் ஆணழகன் மீது ஊக்க மருந்துக் குற்றச்சாட்டு


கொழும்பு, ஜன.08

போட்டி ஒன்றின்போது ஊக்கமருந்து பயன்படுத்தியதாக தம்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை 2017ஆம் ஆண்டு ஆசிய ஆணழகன் மகுடத்தை வென்ற இலங்கைத் தமிழரான லூசியன் புஸ்பராஜ் மறுத்துள்ளார்.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற ஆணழகன் போட்டி ஒன்றின் போது இவர் ஊக்க மருந்து பயன்படுத்தியதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. எனினும் இது தமது கீர்த்திக்கு பங்கம் விளைவிக்கும் செயலாக அமைந்துள்ளதாக புஸ்பராஜ் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேசப் போட்டிகளில் தாம் பங்கேற்பதைத் தடுக்கும் நோக்கமே இந்த விடயத்தின் பின்னால் இருப்பதாக அவர் சந்தேகம் வெளியிட்டுள்ளார். எனினும் தாம் அமெரிக்காவில் நடைபெறும் போட்டியில் பங்கேற்கும் நோக்கை கைவிடவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் தென்கொரியாவில் நடைபெற்ற 51ஆவது ஆசிய ஆணழகன் போட்டியில் இலங்கையைச் சேர்ந்த லூசியன் புஸ்பராஜ் என்ற,இளைஞன் மிஸ்டர் ஏசியா மகுடத்தை வென்றிருந்தார். இதிலிருந்து, ஆசிய ஆணழகன் போட்டியில் இலங்கை வரலாற்றில் முதல் தடவையாக இலங்கைத் தமிழரான புஷ்பராஜ் வெற்றி பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.(அ)





# நடமாடும் வியாபாரிகளுக்கு புதிய பஸ் நிலையத்தில் தடை

வவுனியா, ஜன.08

வவுனியா புதிய பஸ் நிலையத்துக்குள் வியாபாரம் செய்வதற்கு தமக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக நடமாடும் வியாபாரிகள் சக வாழ்வுச் சங்கத்தினர் கவலை வெளியிட்டுள்ளனர்.

இது சம்பந்தமான மத்திய பஸ் நிலையத்தில் மாற்றுவழி குறித்து சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து கலந்துரையாடல் நேற்றுக் காலை நடைபெற்றது.

அதில் உறுப்பினர்களின் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டு இன்று காலை 10 மணியளவில் புதிய பஸ் நிலையத்திலுள்ள தேசியப் போக்குவரத்து ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்களுடன் சந்திப்பில் ஈடுபடவுள்ளதாக நடமாடும் வியாபாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பில் எமக்கு சாதகமான பதில் கிடைக்காவிட்டால் மேற்கொண்டு வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியைச் சந்தித்து தமது சங்க உறுப்பினர்கள் எதிர்கொள்ளும் நிலைமைகளை எடுத்துக்கூறி தீர்வு காண்பதெனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. (அ)

# மீன்பிடியில் இலங்கைக்கு 11ஆம் இடம்

கொழும்பு, ஜன.08

மீன் ஏற்றுமதித் துறையில் உலகளாவிய ரீதியில் இலங்கை 11 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

"2020 ஆம் ஆண்டளவில் மீன் ஏற்றுமதியில் இலங்கையை மூன்றாவது இடத்துக்கு முன்னேற்றுவதே எமது இலக்காகும். கடற்றொழில் துறையின் வளர்ச்சியை தொடர்ந்தும் மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்" என்று கடற்றொழில் மற்றும் நீரகவளமூல அபிவிருத்தி அமைச்சர் தெரிவித்தார். (அ)

# பாலியல் முறைப்பாடு: மகிந்த அலட்சியம்

கொழும்பு, ஜன.08

உள்ளூராட்சித் தேர்தலில் மகிந்த தரப்பில் போட்டியிடும் நடிகையான வேட்பாளர் ஒருவரிடம் பாலியல் லஞ்சம் கோரப்பட்டமை தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மதுஸா ரணசிங்க என்ற இந்த நடிகையிடம் உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பில் மகிந்த ராஜபக்சவின் தரப்பில் களமிறங்கும் பொதுஜன முன்னணியின் பிரமுகர் ஒருவர் இந்தப் பாலியல் லஞ்சத்தை கோரியதாக முன்னதாக முறையிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தமக்கு வேட்பாளர் நிலை வழங்கப்பட வேண்டும் எனில் தனது நிர்வாணப்படம் ஒன்று வேண்டும் என்று தம்மிடம் கட்சிப் பிரமுகர் ஒருவர் கோரியதாக குறித்த நடிகை தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் மகிந்த ராஜபக்சவிடம் தாம் முறையிட்டபோதும், வெறுமனே தான் இந்தச் சம்பவத்துக்கு வருந்துவதாக அவர் கூறி இந்த விடயத்தை முடித்துவிட்டதாகவும் நடிகை சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# கூட்டமைப்பின் கூட்டம் ஒஸ்மானியாவில் நேற்று





யாழ்ப்பாணம், ஜன.08

யாழ்ப்பாணம் மாநகர சபைக்காக தமிழ் தேசியக் கூட்டமைப்பை பிரதிநிதித்துவப்படுத்தி போட்டியிடும் வேட்பாளர்களை அறிமுகம் செய்யும் கூட்டம் யாழ்ப்பாணம் ஒஸ்மானியக் கல்லூரிக்கு அருகில் நேற்று மாலை நடைபெற்றது.

இந்தக் கூட்டம் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் திடீரென அந்தக் கூட்டத்தை ஒத்தி வைத்ததாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே குறித்த கூட்டம் நேற்று நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன், வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே சிவஞானம் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். (அ)

# யானை தாக்கியதில் விவசாயி மரணம்

ஏறாவூர், ஜன.08

ஏறாவூர்ப்பற்று, வெள்ளைக்கல்மலைப் பகுதியில், காட்டு யானையொன்றின் தாக்குதலுக்கு உள்ளான விவசாயி ஒருவர், நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளாரென, கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில், வந்தாறுமூலை பிரதான வீதியை அண்டி வாழும் 51 வயதான முத்துலிங்கம் சுந்தரலிங்கம் என்பவரே உயிரிழந்தவராவார்.

குறித்த நபர், மாடுகளைப் பராமரித்துக் கொண்டு அப்பகுதிலுள்ள வாடியில் இருந்த போது, காட்டிலிருந்து வந்த யானைகளில் ஒன்று, அவரைத் தாக்கிக் கொன்றுள்ளது.

இந்தச் சம்பவத்தைக் கண்டு அயல் வாடிகளில் இருந்தவர்கள், பொலிஸாருக்குத் தெரிவித்ததை அடுத்து, சடலம் மீட்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை, கரடியனாறுப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ)

# சிறுமி துஷ்பிரயோகம் மறியலில் சிறுவன்

வவுனியா, ஜன.08

வவுனியா ஈச்சங்குளம் பகுதியில் 13 வயதான பாடசாலை மாணவியைப் பாலியல் துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய 17 வயதுடைய சிறுவன் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

ஈச்சங்குளம் பகுதியில் வசித்து வரும் 13 வயதுடைய பாடசாலை மாணவியும் மல்லாவியை சேர்ந்த 17 வயதுடைய சிறுவனும் கடந்த ஒரு வருடங்களாகக் காதலித்துள்ளனர்.

இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குறித்த மாணவியின் வீட்டில் ஏற்பட்ட சிறு தகராறு காரணமாக மாணவி வீட்டை விட்டு வெளியேறி தனது காதலனுடன் சென்றுள்ளார்.

மாணவியின் பெற்றோர் மாலை வரை அவரைத் தேடியும் காணாததால், ஈச்சங்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். ஈச்சங்குளம் பொலிஸார் சிறுவனையும் மாணவியையும் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் போது குறித்த பாடசாலை மாணவியை 17 வயதுடைய சிறுவன் பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொண்டுள்ளமை உறுதி செய்யப்பட்டது. அதனையடுத்து குறித்த சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த சிறுவனை வவுனியா மாவட்ட நீதவான் நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஆஜர்படுத்திய போது 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

எதிரொலி Ethiroli
திங்கள். 08 ஜனவரி 2018 ethirolimedia@gmail.com

## அடிமட்டமும் அடிப்படையும்

மக்களின் அடிப்படை வாழ்வாதாரம் அடிபட்டுக் கொண்டிருப்பது, தேர்தல் ஆராவராங்களுக்குள் அமுங்கிப் போய்விட்டது.

"பூங்கா அமைப்போம், வீதி திருத்துவோம், கால் வாய் வெட்டுவோம், சந்தை கட்டுவோம், குப்பைகளை அகற்றி சொர்க்காபுரியாக்குவோம், பாலாறும் தேனாறும் ஓடச் செய்வோம், தமிழர்களின் தலைவிதியையே மாற்றுவோம்" என்ற பிரசாரக் கூச்சல்கள் காதைச் செவிடாக்குகின்றன. ஆனால் எவரும் கீழே குனிந்து தங்கள் கால்களுக்கிடையில் நசுங்கிக் கிடப்பவர்களைக் கவனிப்பதாகவில்லை.

தமிழர்களின் முதன்மையான தொழிலான விவசாயம் இலங்கையிலும் அதலபாதளத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது. முன்னரெல்லாம் வறுமை காரணமாகவும், வாங்கிய கடனை அடைக்க முடியாமலும் விவசாயிகள் தற்கொலை என்ற செய்தி தமிழக ஊடகங்களில் மட்டுமே வரும். இப்போது அப்படியான செய்திகளை தமிழர் தாயகத்திலும் கேட்க முடிகின்றது. விவசாயிகளை ஏதோ அற்ப புழுக்களைப் போல நோக்கும் சமூகப் பார்வையும், போதிய வரும்படி இன்மையும், தோட்டக் காணிகளை எல்லாம் கட்டடங்கள் ஆக்கிரமித்தமையும், உரிய வசதிகள் இல்லாமையாலும், காலநிலை பொய்ப்பதாலும் வேளாண்மை செய்வோரின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்துள்ளது.

முன்னரெல்லாம் எல்லோரும் ஏதோ ஒரு வகையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களாக இருப்பர். ஆனால் இப்போது விவசாயிகளைத் தேடிப் பிடிக்க வேண்டியிருக்கிறது. காலநிலை பொய்ப்பதற்கு நம்மால் எதுவும் செய்ய முடியாது தான். ஆனால் காலநிலை பொய்த்தாலும் வேளாண்மை பொய்க்காமலிருப்பதற்கான நடவடிக்கைகளைச் செய்ய முடியும். குளங்களை அமைத்தல், மழை நீரை வீணாக்காமல் சேகரித்தல், குறைந்தளவு நீரைப் பயன்படுத்தும் தொழினுட்பங்களைப் பிரயோகித்தல் என்பன இதற்குப் பரிகாரமாக இருக்க முடியும்.

மற்றப்படி வருமானக் குறைவு, தோட்டக்காணிகளை இழத்தல், சமூகப் பார்வை, உரிய வசதிகள் கிடையாமை என்பன போன்றவற்றை மாற்றியமைக்கும் அதிகாரம் உள்ளூராட்சி சபைகளிடம் உண்டு. ஆனால் உள்ளூராட்சி சபைகளின் கட்டுப்பாட்டில் தான் சந்தைகள் வருகின்றன. அந்தச் சந்தைகளில் விவசாயிகளின் உற்பத்திக்கு நியாயமான விலையைப் பெற்றுக் கொடுத்தல், தரகுப் பண அறவீட்டை இல்லாதாக்குதல், உள்ளூர் விவசாயப் பொருள்களைப் பழுதடையாமல் பேணக்கூடிய களஞ்சிய வசதிகளை ஏற்படுத்தல் என்பவற்றைச் செய்தாலே விவசாயிகளுக்கு ஓரளவு சுமாரான வருமானம் கிடைக்கும்.

அதேபோன்று புதிய கட்டடங்களை அமைப்பதற்கான அனுமதியை வழங்குவதும் உள்ளூராட்சி அமைப்புகளின் கீழேயே வருகின்றன. அப்படி அனுமதிக்காக விண்ணப்பிக்கும் போது, அது விவசாய நடவடிக்கைகாகப் பயன்படுத்தப்படும் காணி என இனங்கண்டால் , அவற்றுக்கு அனுமதி வழங்காமல் விடுவதன் மூலம் எஞ்சியிருக்கும் விவசாய நிலங்களையாவது காப்பாற்ற முடியும்.

விவசாயிகளுக்குத் தேவையான உள்ளீடுகளையும், பசளையையும், இன்ன பிற கருவிகளையும் உள்ளூராட்சி மன்றங்கள் ஊடாகப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கலாம். வருடாந்தம் விவசாயிகளைக் கௌரவிப்பதோடு, 'அவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களில் ஏதும் சிறப்புச் சலுகைகளை வழங்குவதன் மூலம் சமூக அந்தஸ்தை நாளடைவில் ஏற்படுத்த முடியும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக, எந்தவொரு கட்சியும் உள்ளூராட்சித் தேர்தலில் மறந்தும் விவசாயிகள் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை. அடிமட்டத்தில் இருந்தாலும் நம் வாழ்வின் அடிப்படையும் விவசாயிகள் தான். அந்த அடிப்படையைக் கவனிக்காமல் வெறுமனே வீதிப் புனரமைப்பை மட்டுமேதான் உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்றும் கட்சிகள் செய்யப்போகின்றனவா?

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# ரணிலே அடுத்த ஜனாதிபதி

கொழும்பு, ஜன.08

"நாட்டின் அடுத்த ஜனாதிபதியாக, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிக்கப் போகின்றார். இந்தக் கள நிலவரங்களைப் புரிந்து கொள்ளாமல், நாம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு விலை போய் விட்டோம் என ஒரு சாரார் கொக்கரிப்பது, அரசியல் அறிவுச் சூனியமான பேச்சேயன்றி வேறில்லை" என, கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்



சரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தவிசாளருமான செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

"எடுத்ததெற்கெல்லாம் மக்களிடம் வரி அறவிட்டு, தாங்க முடியாத வரிச்சுமையை மக்கள் மீது ஏற்படுத்தி, உள்ளூராட்சிமன்றங்கள் என்றாலே மக்களிடம் வெறுப்பேறுமளவுக்கு உள்ள நிலைமையை மாற்றி, முழுவதுமாக மக்களுக்குச் சேவை செய்வதை நடைமுறையில் காட்டவே, நாங்கள் உள்ளூராட்சி மன்றங்களைக் கைப்பற்றப் போகின்றோம்" எனவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# சுயலாபத்துக்காகவே சீமானின் ஈழ அரசியல்

## நாமல் கொந்தளிப்பு





கொழும்பு, ஜன.08

அரசியல் சுயலாபத்துக்காக மட்டுமே இலங்கைத் தமிழர் விவகாரத்தை சீமான் பயன்படுத்துகிறார் என்று நாமல் ராஜபக்ச கூறியுள்ளார்.

நடிகர் ரஜினிகாந்த் அரசியல் கட்சி தொடங்கப் போவதாக அறிவித்த சில மணி நேரங்களில், இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகன் நாமல் ராஜபக்ச ருவிட்டர் மூலம் அவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார்.

இது தொடர்பாக நாம் தமிழர் கட்சியின் சீமான், இலங்கை முன்னாள் ஜனாதிபதியின் மகன் ரஜினிகாந்துக்கு வாழ்த்துச் சொல்ல வேண்டிய அவசியம் என்ன என்று தனியார் தொலைக் காட்சியில் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்த நிலையில், சீமான் எழுப்பிய கேள்விக்கு நாமல் ராஜபக்ச ருவிட்டரில் "சுய அரசியல் லாபத்துக்காக மட்டுமே இலங்கை தமிழர் விவகாரத்தை சீமான் பயன்படுத்துகிறார். இலங்கைத் தமிழர்கள் மீது சீமானுக்கு உண்மையில் அக்கறையில்லை" எனப் பதிலளித்துள்ளார். (அ)

# "எந்த மாற்றத்துக்கும் சகலரின் சம்மதமும் தேவை"



புதிய அரசியல் அமைப்பொன்று உருவாக்கப்படுவதானாலும் சரி, உள்ளதில் திருத்தங்கள் கொண்டுவரப்படுவதானாலும் சரி சகல தரப்பினதும் அனுமதியுடனேயே இடம்பெறும் என அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசியல் அமைப்பு விடயத்தில் தன்னிச்சையாக தீர்மானம் எடுக்க மாட்டோம். அதேபோன்று, ஊழல் குற்றவாளிகளை தண்டிப்பதிலும் நாமே முன்னிற்போம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய வங்கி பிணை முறி விவாகரத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குற்றவாளிகள் யாராக இருந்தாலும் அவர்கள் எந்தக் கட்சியாக இருந்தாலும் அரசாங்கமாக ஒன்றாக இருந்து நாங்கள் சட்ட நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என ஹோமாகம பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில் அமைச்சர் இதனைக் கூறினார். (ச)

# காட்டுக்குள் குழந்தை

கொழும்பு, ஜன.08

குருவிட்டை - தெப்பன்னாவ பிரதேசத்தில் வீடொன்றுக்கு அருகில் உள்ள காட்டில் கைவிடப்பட்டிருந்த நிலையில் பச்சிளம் குழந்தை ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

பிறந்து ஒரே நாளே ஆன குறித்த குழந்தையை பிரதேசவாசிகள் மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். பிரதேசவாசிகள் குழந்தையை தெப்பனாவ கிராமிய வைத்தியசாலையில் கையளித்துள்ளனர். இதனைத் தொடர்ந்து அந்த வைத்தியசாலையின் அதிகாரிகள் குழந்தையை இரத்தினபுரி வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர். (அ)

# பரோட்டாவுக்குள் பணம் அனுராதபுரத்தில் ஆச்சரியம்

கொழும்பு, ஜன.08

அனுராதபுரத்தில் பரோட்டா ரொட்டிப் பார்சலுக்குள் பெருந்தொகையான பணம் கிடைத்த சம்பவம் அந்தப் பகுதியை ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

குறித்த பிரதேசத்தில் உள்ள உணவகத்தில் ஒருவர் 5 பரோட்டா ரொட்டிகளைக் கொள்வனவு செய்து வீட்டுக்கு கொண்டு சென்று குடும்பத்தினருடன் இணைந்து உண்ண முயன்றார்.

அப்போது ரொட்டிப் பார்சலுக்குள் பெருந்தொகைப் பணம் காணப்பட்டுள்ளது. இந்த நிலையில் அந்த பணத்தை அவதானித்த வீட்டுக்காரர் உடனடியாக அதனை உணவக உரிமையாளரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ரொட்டியைப் பார்சல் செய்யும் போது, தவறுதலாக கடை முதலாளியின் பணம் அடங்கிய தபால் உறையையும் சேர்த்து பார்சல் செய்ததாலேயே இந்தக் குழப்பம் ஏற்பட்டது.

பணம் காணாமல் போனமையினால் பதற்றமடைந்து அனைவரும் தேடிக் கொண்டிருக்கும் போதே, ரொட்டியை வாங்கிய தந்தையும் மகனும் பணத்தை ஒப்படைத்தனர் என உணவக உரிமையாளர் தெரிவித்துள்ளார். (அ)

# சேர்ந்து செல்ல முடியாதவர்கள் எப்படித் தலைமை தாங்குவர்?

மட்டக்களப்பு, ஜன. 07

புதிய அரசியலமைப்பின் இடைக்கால அறிக்கையை, உத்தேச அரசியல் யாப்பாக மாற்ற உள்ளூராட்சி சபைத் தேர்தலை மக்கள் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமது பலத்தை நிரூபிப்பதன் ஊடாக உத்தேச அரசியல் யாப்பை பலமான யாப்பாக உருவாக்க முடியும் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பு ஊரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இதில் பங்கேற்று உரையாற்றிய இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராஜசிங்கம் தமிழ் தேசிய கூட்டமைப்பு அபிவிருத்தி செய்யவில்லை என சிலர் தெரிவிக்கின்ற போதும் தமிழ் தேசிய கூட்டமைப்பு எவ்வாறான அபிவிருத்தி செய்துள்ளது என மக்களுக்குத் தெரியும்.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை கண்ணியமாக - நிதானமாக - அர்த்த புஷ்டியுடன் எடுத்துச் செல்லும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் சேர்ந்து செயற்பட முடியாமல் சிறிய சிறிய அற்ப காரணங்களுக்காக விலகிச் சென்றவர்கள் எவ்வாறு தமிழ் மக்களுக்கு தலைமை தாங்க முடியும் என அவர் கேள்ளிவியெழுப்பினார். (ச)

## இன்று நாளும் கோளும்

08.01.2018 திங்கட்கிழமை ஏவிளம்பி வருடம் மார்கழி மாதம் 24 ஆம் நாள்
ஸப்தமி பி.ப 09.51 | உத்திரம் மு.ப 07.15 | சித்தயோகம்
இராகுகாலம் 074.30 - 09.00 | சுபநேரம் மு.ப. 06.30 - 07.30 | எமகண்டம் மு.ப. 10.30 - 12.00

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கவனம் | ஆர்வம் | நன்மை | வெற்றி | பக்தி | முயற்சி | ஜெயம் | பரிவு | நிறைவு | ஆக்கம் | யோகம் | மகிழ்ச்சி |

எதிரொலி Ethiroli

திங்கள் 08 ஜனவரி 2018

# சிப்பாயைக் காணோம்

கொழும்பு, ஜன.08

பொலனறுவை - மின்னேரியா இராணுவ முகாமில் சேவையாற்றி வந்த நிலையில், வீட்டுக்குச் சென்றிருந்த சிப்பாய் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

மின்னேரியா - ஹேன்யாய பிரதேசத்தில் வசித்து வந்த 23 வயதான சிப்பாயே இவ்வாறு காணாமல் போயுள்ளதாக மின்னேரியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிப்பாயின் தாய் இது குறித்து பொலிஸ் நிலையத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளார். இந்த நிலையில், சில தினங்களுக்கு முன்னர் காணாமல் போன சிப்பாய் இரத்தினபுரி பிரதேசத்தில் ஏ.டி.எம் இயந்திரத்தில் பணம் எடுத்துள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளதாக சிப்பாய் காணாமல் போன சம்பவம் குறித்து விசாரணை நடத்தி வரும் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி கூறியுள்ளார். இதனடிப்படையில், தொடர்ந்தும் விசாரணைகளை நடத்தி வருவதாக பொலிஸ் அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# வீரவன்சவை விசாரிக்க தனிக்குழு தேவை



கொழும்பு, ஜன.08

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச செய்த ஊழல், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் குறித்து விசாரணை நடத்த தனியான ஆணைக் குழுவை நியமிக்குமாறு அமைச்சர் பீ.ஹரிசன், அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அனுராதபுரத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.விமல் வீரவன்சவிடம் இரண்டு தேசிய அடையாள அட்டைகள் இருக்கின்றன. இதனால், அவர் இரண்டு முறை தேர்தலில் வாக்களிக்கக் கூடும் என்ற சந்தேகம் உள்ளது. மேலும் வீரவன்சவின் குடியுரிமை தொடர்பாகவும் சந்தேகம் இருக்கின்றது. அதேவேளை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, உண்மையான ஆதரவுடன் தற்போதைய ஜனாதிபதியுடன் இருக்கவில்லை. அவரது உடல் மைத்திரியிடம் இருந்தாலும் மனம் எங்கிருக்கின்றது என்பதை நம்ப முடியாது எனவும் அமைச்சர் பீ. ஹரிசன் குறிப்பிட்டுள்ளார். (அ)



# சீனிப் பாணியில் தேன் மோசடிக்காரர் கைது

வவுனியா, ஜன.08

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊர்மிளாக் கோட்டம் பகுதியில் சீனிப் பாணியினை காய்ச்சி தேன் என ஏமாற்றி விற்பனை செய்த பெண் உட்பட இருவர் கைது செய்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா நெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊர்மிளாக் கோட்டம் பகுதியில் சீனிப் பாணியினை காய்ச்சி தேன் என விற்பனை செய்யப்படுவதாக வவுனியா சுகாதாரப் பரிசோதர்களுக்கு இரகசிய தகவல் கிடைத்தது. இதனடிப்படையில் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தியாகலிங்கம், பொது சுகாதார பரிசோதகர் வோல்ட்டயன் ஆகியோரின் தலைமையிலான குழுவினர் நெளுக்குளம் பொலிஸாரின் உதவியுடன் மேற்கொண்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையின் போது ஊர்மிளாக் கோட்டம் பகுதியில் வீடொன்றில் சீனிப் பாணி காய்ச்சிய 38 வயதுடைய பெண்ணொருவரையும் 26 வயதுடைய ஆணொருவரையும் கைது செய்தனர்.

அவர்களிடமிருந்து தேன் என்ற லேபிள் ஒட்டப்பட்டு, அடைக்கப்பட்டிருந்த 73 போத்தல் சீனிப் பாணியையும் சுகாதாரச் சீர்கேடான முறையில் காய்ச்சப்பட்ட 2 அரைப் பீப்பாய் சீனிப்பாணியையும் பட்டா வாகனமொன்றையும் கைப்பற்றினர்.

கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதவான் முன்னிலையில் ஆஜர்ப்படுத்திய போது இன்று திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (அ)

# முன்னாள் தூதர் ஈஸ்வரன் கொழும்பில் காலமானார்



கொழும்பு, ஜன.08

இலங்கைக்கான மொரிஸியஸ் நாட்டின் முன்னாள் தூதுவரும், பிரபல தொழிலதிபரும் கம்பன் கழக முன்னாள் தலைவருமான 'தேசபந்து' தெய்வநாயகம் பிள்ளை ஈஸ்வரன் (வயது - 76) நேற்று முன்தினம் சனிக்கிழமை காலமானார்.

சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த அவர் சிங்கப்பூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் பிற்பகல் காலமானார். இவர் பிரபல சமய, சமூக சேவையாளராவார். கொட்டாஞ்சேனை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் அறங்காவலராகவும் பணியாற்றி வந்தார்.

அவரது பூதவுடல் இலக்கம் 133, புதுச் செட்டித்தெரு, கொழும்பு 13 என்ற முகவரியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் இறுதி அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கிரியைகள் கொழும்பில் இன்று திங்கட்கிழமை மாலை இடம்பெறும். (அ)

# தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஈஸ்வரன் மறைவுக்கு அனுதாபம்

கொழும்பு , ஜன.08

இலங்கையில் சைவத்துக்கும் தமிழுக்கும் அளப்பரிய பங்காற்றிய பிரபல தொழில் அதிபரான 'தேசபந்து' தெய்வநாயகம் ஈஸ்வரனின் மறைவுச் செய்தி அதிர்ச்சியளிப்பதாகவுள்ளதாக தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

"ஈஸ்வரன் நல்லதொரு இலக்கியவாதி, நல்லதொரு சிந்தனையாளர், நல்லதொரு பேச்சாளர் என்பதுடன் சமூக சேவையில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். தேவையான நேரத்தில் தேவையானவர்களுக்கு உதவுவதில் அவர் ஒரு போதும் பின்நிற்பவரல்ல.

தமிழ் ஊடகத்துறையினருடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்த அவர், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வளர்ச்சியிலும் அக்கறை கொண்டவர். எமது இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்துகொண்டு பிரதான உரையையும் அவர் நிகழ்த்தியிருந்தார். அவரது மறைவு தமிழ் ஊடகத்துறையினருக்கும் அதிர்ச்சியளிப்பதாகும்.

அவரது மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளும் அதேவேளையில், அவரது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக்கொள்கிறது" என ஒன்றியத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு , ஜன.08

"2017 ஆம் ஆண்டில் சுற்றுலாப் பயணிகளின் வருகை 3.2 வீதத்தினால் அதிகரித்துள்ளது. இந்தக்காலப்பகுதியில் 21 இலட்சத்து 16 ஆயிரத்து 407 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

"இலங்கையின் சுற்றுலாத் துறையின் சவால்மிக்க காலப்பகுதியாக கருதப்படும் 2017 ஆம் ஆண்டில் இந்த அதிகரிப்பு பதிவு செய்யப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்" என சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது. (அ)



## "எல்லாம் மாயை. மிக்க கவனம் தேவை"

எல்லா விரதமும் போன கிழமையோடை முடிஞ்சுது. அதுக்குப் பிறகு நேற்றைக்கு வந்ததுதான் முதல் ஞாயிறு. தருமு அதுவரைக்கும் வலு ஒழுங்கா நல்ல பிள்ளையா இருந்து விரதமும் பிடிச்ச சைவப்பழம் இப்ப மச்சப் புழுமா நிக்கிது. நேற்றைக்கு பனையாலையோ இல்லைத் தென்னையாலையோ சோடிச்சுக் கொண்டு சந்தியிலை நிண்டு ஒரே அட்டகாசம்.

என்னெண்டு கேட்டால், "கண்ட கண்டவன் எல்லாம் எலக்சன் கேக்கிறானாம். தன்னைக் கேக்க விடேல்லையாம். தான் ஒரு ஜென்டில்மேன் ஊருக்கை இருக்கிறது கண்கெடுவாருக்குத் தெரியாமல் போச்சுதோ?" எண்டு போறவாறவை எல்லாரையும் பிடிச்சுக் கேளாத கேள்வி. நானும் வந்தன் என்னையும் தருமு பிடிச்சு ஞாயங் கேட்டான். "விநாசி அண்ணை, இதைக் கேள்" எண்டு கிழிஞ்ச றெக்கோட்டைப் போட்டமாதிரித் திருப்பித் திருப்பி அதே புராணம் பாடி என்னை உயிரோடை கொல்லாத குறை. அவனீட்டை இருந்து தப்ப நான் பட்ட பாடு. கிட்டத்தட்ட ஒரு மணித்தியாலம் போராடின்னான். தெரியுமோ? "கண்ட கண்டவன், கள்ளன், கொலைகாரன், பொம்பிளைப் பொறுக்கி எல்லாரையும் எலக்சன் கேக்கப் பண்ணினவங்கள். என்னை ஏன் போடேல்லை?" எண்டு என்னை உலுக்கினான்.

சரி தருமு! உன்னை எலக்சன் கேக்கப் போடுறதுக்கு நீ என்ன ஊருக்குச் செய்திருக்கிறாய்? எண்டு கேட்டன் அதுக்கு அவன் சொன்னான்" அண்ணை ஊருக்கை குடும்பச் சண்டை எண்டால் முன்னுக்கு நிக்கிறது, இந்தத் தருமு தானே? ஆரேன் கிணத்துக்கை விழுந்திட்டால் ஆரிட்டைச் சனம் ஓடி வருகுது? என்னட்டைத்தானே? வீட்டுக்கை பாம்பு பல்லி உள்ளுட்டா, ஆரிட்டை ஓடி வருகினம்,? என்னட்டைத் தானே? போன மாசம் ஒருத்தி சீலையைப் போட்டிட்டுத் தூக்குப் போட்டிட்டாள். எல்லாரும் கத்தினவையே ஒழிய ஒருத்தருக்கும் கதவை உடைச்சு உள்ளுக்கை போகத் தெரியேல்லை. கடைசியா இந்தத் தருமுதான் ஓடு பிரிச்சு இறங்கி சீலையை வெட்டிக் காப்பாத்தினது. இது ஒரு பெரிய சேவையா உங்களுக்குத் தெரியேல்லையே? இதைப் படத்திலை முந்தி எம். ஜி.ஆர் செய்தா மட்டும் கை தட்டுறியள். விசிலடிக்கிறியள். அவரை முதலமைச்சர் ஆக்கிறியள்.

அப்ப. இத்தினை வேலை செய்திட்டு ஊருக்கை திரியிறன் என்னை ஒருத்தருக்கும் மனுசனாத் தெரியேல்லை, என்ன? என்னிலை பொம்பிளைச் சேட்டை இல்லை. களவு இல்லை. காவாலிச் சேட்டை இல்லை. கோடு கச்சேரி எண்டு ஏறி இறங்கினது எங்கடை வம்சத்திலை கிடையாது. நான் உழைச்சுக் கட்டினது என்ரை வீடு. பொதுச் சொத்திலை கொள்ளை அடிச்சுக் கட்டேல்லை. என்ன? கையிலை காசு இருக்கிற அளவுக்கேற்ற மாதிரி ஒண்டு, இரண்டை அடிச்சிட்டுச் சாப்பிட்டுப் படுத்திடுவன். இப்பிடிப் பட்ட ஒரு பரம சாதுவை ஏன் அவங்கள் தெரியேல்லை? எனக்கு என்ன படிப்பில்லை எண்டு சொல்லப் போறியளே? ஓ. எல் வரை படிச்சனான். எங்கடை நாட்டிலை ஜனதிபதியா இருந்த பிரேமதாஸா என்னத்தைப் படிச்சவர்? – எண்டு தருமு கத்திக் கொண்டு போறவாறவைக்குச் சண்டித்தனமும் விட்டுக் கொண்டு நிக்கேக்கை, பொலிஸ் ஜீப் ஒண்டு யாழ்ப்பாணப் பக்கத்திலை நிண்டு வந்திது. தருமுவின்ரை வெறியையுங் காணேல்லை. ஆள் நிண்ட இடத்தையுங் காணேல்லை. வறுகித் தள்ளிவிட்டான்.

ஆனால் வெறியிலை தருமன் கதைச்சாலும் அவன்ரை கதைகாரியத்திலை பிழையா ஒண்டையுங் காணேல்லை. முந்தி எலக்சனுக்குச் சீற்றுக் குடுக்கிறதுக்கு எத்தினை விசியத்தைப் பாத்தவை. அவன்ரை பரம்பரை பாத்து. அவனிட்டை இருக்கிற நல்லது கெட்டது பாத்து. அவன்ரை படிப்பைப் பாத்து. அவன் காரியத்தை எப்பிடிச் செய்வன் எண்டு பாத்து. குடும்பத்தைப் பாத்து. இப்ப ஒண்டையும் பாக்கிறேல்லை. சைனாச் சாமாங்களை வாங்கிற மாதிரி. அப்ப பாவிக்கக் கூடியதா இருந்தால் சரி. பிறகு உடைஞ்சால் என்ன? கிழிஞ்சால் என்ன? அதைப் பற்றி அக்கறை இல்லை. வெளிவேஷம் சரியா இருக்க வேணும். உள்ளுடன் என்னெண்டாலும் இருக்கலாம். அப்பிடிப் பட்ட உலகத்திலை தான் சீவிக்கிறம். சுவாமி விவேகானந்தர் சொன்ன மாதிரி "எல்லாம் மாயை தான்". ஆனால் மிகவும் கவனமா வோட்டைப் போடுங்கோ. இந்த எலக்சன்தான் கன விசியத்தைத் தீர்மானிக்கப் போகுது. கனபேற்றை வேஷத்தைக் கிழிக்கவும் போகுது. நிதானத்தை விட்டிடாதையுங்கோ. என்ன? விநாசி எப்பவும் நன்மைக்குத் தான் சொல்லுவன்!

- வில்லங்கம் விநாசி



# தலைவனைத் தந்த தந்தை


**2010ஆம் ஆண்டு தை மாதம் 6 ஆம் திகதி மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளை தனது 86ஆவது வயதில் பனாகொடவில் இருக்கும் இராணுவ முகாமில் மரணித்தார். தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்றுவித்தவரும், தேசியத் தலைவருமான வே. பிரபாகரனின் தந்தை. இந்தக் காரணத்துக்காகவே அவர் இறுதிவரை தடுத்து வைக்கப்பட்டிருந்தார். அவரது 7 ஆம் ஆண்டு நினைவேந்தல் கடந்த 6 ஆம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அதனையொட்டி இந்தப் பதிவு பிரசுரிக்கப்படுகின்றது.**

ஈழத்தமிழர்களின் ஒரே தேசியத் தலைவர் பிரபாகரனை எங்கள் தேசத்தின் விடிவுக்காகத் தந்த திருவேங்கடம் வேலுப்பிள்ளையின் பிரிவு எம்மை மிக ஆழ்ந்த சோகத்தில் இட்டுச் சென்றது. யுத்தம் முடிவுற்று பல மாதங்கள் ஆகியும் கடும் நோயின் காரணமாகத் தவித்த போது கூட அவருக்கு சிகிச்சை அளிக்க மறுத்த சிங்கள அரசு அவரை அந்த முகாமை விட்டுச் செல்ல அனுமதிக்கவில்லை.

வார்த்தைக்கு வார்த்தை மனித உரிமையை உச்சரிக்கும் வல்லரசு நாடுகளும், சர்வதேச நாடுகளும் இதனைக் கண்டும் காணாமல் மௌனம் சாதித்தன. உண்மையிலே, உலக நாடுகள் சுயநலம் இன்றி நேர்மையாக செயற்பட்டிருந்தால் மாதந்தை திருவேங்கடம் வேலுப்பிள்ளையை மட்டும் அல்ல எத்தனையோ உயிர்கள் காப்பாற்றியிருந்திருக்கலாம்.

1800ஆம் ஆண்டில் வல்வெட்டித்துறை கடலில் சுமார் 87 கப்பல்களோடு வணிக சுதந்திர வர்த்தக வலயத்தை நிறுவி இந்தியா, பர்மா ஆகிய நாடுகளோடு வணிகம் நடத்திய கப்பலோட்டிய தமிழர் பரம்பரையில் உதித்தவரே திருவேங்கடம் வேலுப்பிள்ளை. பிரித்தானிய ஆக்கிரமிப்பாளர்களும், சிங்கள ஆக்கிரமிப்பாளரும் சட்டவிரோதம் என கட்டிப் போட முயன்ற போதும் அடங்காத் தமிழர்களாக அடக்குமுறைகளுக்கும், தடைகளுக்கும் தளராமல் சுதந்திரமாகக் கடலில் வணிகம் செய்து கடலோடு மோதி விளையாடும் வீரத்தின் பிறப்பிடமாக வாழ்ந்தவர்கள் இவரது முன்னோர்

வல்வட்டித்துறையில் 'இராமநாதபுரம் ஜமீன் பரம்பரையினர் வழித்தோன்றல்கள்' எனக் கருதப்படும். "எசமான் பரம்பரையில்" கோவில் கட்டிய நற்குடி பெருமகனான வேலாயுதத்தின் மகன் திருமேனியார் 'என்பவராவார். அவரது மகனான கோவில் கட்டிய பெருமை பெற்ற வெங்கடாசலம் என்னும் பெருமகனார் 1822ஆம் ஆண்டு ஆறுமுக நாவலர் பிறந்த அதே ஆண்டில் பிறந்து 1892 ஆம் ஆண்டு மறைந்தார்.அவரது மகன் வேலுப்பிள்ளையின் மகன் தமிழ் நாட்டின் எல்லையைக் குறிக்கும் பெயரான திருவேங்கடம் என்னும் பெயர் கொண்டவர். இவர் மலேசியா சென்று ரயில் திணைக்களத்தில் பணியாற்றிய காலத்தில் பல ஈழத் தமிழர்களை மலேசியாவுக்கு அழைத்து வேலை வாய்ப்புகள் எடுத்துக் கொடுத்து உதவினார். இவர் தனது மகனுக்கு தன் தந்தையின் பெயரான வேலுப்பிள்ளை என்னும் நற்பெயரைச் சூட்டினார். மலேசியாவில் திருவேங்கடம் தம்பதியினருக்கு 1924ஆம் ஆண்டு ஜனவரி 10ஆம் திகதி அன்று அருந்தவ மகனாக திருவேங்கடம் வேலுப்பிள்ளை பிறந்தார்.



சிறுவயதிலேயே தன் தாயை இழந்திட்ட இவர் தன் தந்தையாருடன் சிறுவயதிலேயே (சுமார் 5 வயதில்) வல்வெட்டித்துறைக்குத் திரும்பினார். இவரது முன்னையோர் கட்டிய வல்வை வைத்தீஸ்வரன் என்னும் சிவன் கோவில் சூழலில் தனது பிள்ளைப் பிராயத்தைக் கழித்த இவர் சிதம்பரா வித்தியாலயத்தில் தனது இளமைக் கல்வியைக் கற்றுக் கொண்டார். மென்மையுள்ளத்தோடும், நேர்மைப் போக்கோடும் வாழ்ந்த இவர், இலங்கை அரசியலில் ஈடுபாடு இல்லாதவராகவே வாழ்ந்தார். பொய் பேசாத சட்டவிதி முறைகளுக்கு கட்டுப்பட்ட நேர்த்தியான வாழ்வை கட்டுப்பாட்டோடு கடைப்பிடித்தார். சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலாக அரசு அலுவலராக முல்லைத்தீவு, மட்டக்களப்பு மற்றும் வவுனியா போன்ற இடங்களில் கடமையாற்றினார்.

தமிழ்ப் பண்பாட்டின் இலக்கணமாக வாழ்ந்த இவர் நேர்மையின் சிகரம் எனப் போற்றப்பட்டார். மரபுவழிச் சிந்தனையோடு அரசபணி பொறுப்பேற்று அரசிற்கு விசுவாசமான அரச ஊழியராகவே காலம் முழுவதும் வாழ்ந்த இவருக்கு சிங்கள அரசு புகட்டிய பாடம் என்ன? நேர்மையும், உண்மையும் மற்றும் அகிம்சையும் போற்றினாலும் தமிழருக்கு இலங்கைத்தீவில் நிம்மதியான, நீதியான வாழ்வு என்றுமே இல்லை என்பதே இலங்கை அரசு இவர் போன்ற அப்பாவித் தமிழர்களுக்கு புகட்டுகின்ற பாடமாகும். இவரது தன்னடக்கமான சுபாவத்துக்குச் சான்றாக இவரது முன்னோர் கட்டிய ஆலயத்தில் அறங்காவலர் குழுவில் தலைமைப் பொறுப்பேற்க இவரை கோரியபோது மறுத்த நிகழ்வைக் கூறமுடியும். ஓய்வு பெற்ற சில காலத்தில் ஆலய நிர்வாகப் பணியை ஏற்று நடத்தியுள்ளார். 1946ஆம் ஆண்டு பார்வதி அம்மையாரை கைப்பிடித்த இந்தப் பெருமகனார் அம்மையாருடன் ஈருடல் ஓருயிர் என மனம் கோர்த்து இல்லறவாழ்வின் இலக்கணமாக இறுதி வரை வாழ்ந்தவர் என்பது உலகறிந்த உண்மை.

இனிய இல்லறத்தின் அரும்பயனாக 1948ஆம் ஆண்டு இவர்களுக்கு மனோகரன் என்னும் அருமை மகனும் அவரைத் தொடர்ந்து ஜெகதீஸ்வரி, வினோதினி, என்னும் அருமை மகள்களும் நான்காவதாக பிரபாகரன் என்னும் செல்ல மகனும் வந்துதித்தனர்.

வேலுப்பிள்ளை அரசியல் வாடையையே விரும்பாதவர். எந்தவொரு தேர்தலிலும் அவர் வாக்களிக்கச் செல்லாதவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இயல்பாகவே வரலாற்றின் மீது ஆர்வம் கொண்ட இந்தப் பெருமகனார் தன் பிள்ளைகளுக்கு மட்டுமன்றி வரலாற்றின் மீது ஆர்வம் கொண்டவர்களோடும் அது பற்றி விவாதித்தார். எனினும் அரச விதிகளை மீறுவதை அவர் சரியெனக் கொள்ளவில்லை. ஆனால் அவரது செல்வப் புதல்வனான தேசியத் தலைவரோ தமிழினம் சிங்கள ஆட்சியாளரிடம் அடிமைப்பட்டு அல்லல்பட்டு மடிவதை விரும்பவில்லை. கடந்த கால வரலாற்றில் அகிம்சை வழி கற்றுத்தந்த கசப்பான பாடங்களில் பயனேதும் இல்லை என்பதைக் கண்ட பெருந்தலைவர் அநீதியைத் தடுத்து நிறுத்த ஆயுதப் போராட்டமே ஒரே வழியென உணர்ந்து குடும்பத்தைப் பிரிந்து நீதிக்கான போராட்டப் பாதையை தனதாக்கிப் புறப்பட்டார்.

சமூகத் தலைவர்கள் வம்சத்தில் உதித்திட்டதனால் அவருள் மிகுந்திருந்த ஆளுமையானது அவரை ஒரு இனத்தின் தேசியத் தலைவராக்கியது. தமிழினத்தினைக் காக்க தலைவர் புறப்பட்டதைக் காரணமாக்கி, காரணமின்றி அவரது பெற்றோர் பல தரப்பட்ட துன்புறுத்தல்களுக்கு உள்ளானார்கள். குறிப்பாக துரையப்பா மறைவின் பின், 'தன் மகனைத் தேடி வரும் இலங்கைப் பொலிஸாரிடம் தந்தையார் சொல்லும் பதில் "நானும் என் மகனைத் தேடிக் கொண்டுதானிருக்கிறேன். நீங்கள் கண்டுபிடித்தால் கூட்டிக் கொண்டு வாருங்கள்" என்பதாகும். அரச படையின் சித்திரவதை தாங்காமலும், அயலவர்களுக்கு தம்மால் சிக்கல் ஏதும் வரக் கூடாது எனக் கருதியும் 1983 ஆம் ஆண்டு பொலிகண்டியில் 'கந்தவனக் .கடவை' கோவில் மண்டபத்தில் சிலகாலம் வாழ்ந்த வேலுப்பிள்ளை – பார்வதி தம்பதியர் தலைமறைவாக இருந்தனர். ஆயினும் அங்கும் வாழ முடியாத சூழலில் இந்தியாவில் தஞ்சம் புகுந்தனர். அந்தக் காலத்தில் எம்.ஜி.ஆர் உட்பட பல தமிழின உணர்வாளர்களுடன் உறவு கொண்டு அவர்கள் அன்பையும் நன்மதிப்பையும் பெற்று மகிழ்ந்திருந்தனர். அந்தக் காலத்தில் வேலுப்பிள்ளை ஐயா சிறிது சுகயீனமுற்ற போதும் விரைவில் அவர் தேறினார். ஆனால், பார்வதி அம்மையார் பாரிச வாதத்தால் தாக்குண்டு ஒரு காலும், ஒரு கையும் செயலிழந்து அவதியுற்ற நிலையில் அவரை தாய்க்குத் தாயாக உற்ற துணையாக அரவணைத்து பராமரித்த பெருமை வேலுப்பிள்ளை ஐயாவையே சாரும்.

இலங்கையில் சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின் 2002 ஆம் ஆண்டுக்கு பின்னர் "இனியேனும் தாயகத்தில் அமைதியாக வாழ முடியும்" என்ற நம்பிக்கையோடு தாயகம் திரும்பிய இவ்விணையர்கள் வன்னியில் தமது இறுதிக்காலத்தை கழித்தனர். சில காலமேனும் தாயகத்தில் இனிதாக வாழ்ந்த பெருமை இவர்களுக்கு உண்டு. பெருந்தலைவரின் தந்தையார் என்ற எந்தச் சலுகைகளும் இன்றி மக்களோடு மக்களாக எளிமையாக கிளிநொச்சியில் தனிக்குடித்தனம் ஆற்றிய இந்தப் பெருமகனார் கொள்கைப்பற்றாளராக இறுதிவரை வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கதொன்றாகும். பார்வதி அம்மையாரும் இவரும் கூடி வாழ்ந்த அழகான வாழ்வு அழகான கவிதைக்கு ஒப்பானது. இணை பிரியாத அன்றில்கள் போல் வாழ்ந்த இவர்களுக்கு சொந்த மண் கொடுத்த சுகம் தனியானது. பிரிந்து வாழ்ந்த மகவோடு இணைந்து உறவாடும் இன்பம் தந்தது. அந்த இனிய காலம் நீடிக்கவில்லை.

இவர்கள் இருவரும் 18-05-2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்கால் பகுதியில் இருந்து வெளியேறி பொது மக்களுடன் சேர்ந்து ஓமந்தைப் பகுதிக்குச் சென்ற போது இலங்கை அரச படைகளால் கைது செய்யப்பட்டு பனாகொட தலைமை முகாமில் கடந்த 8 மாதங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கனடாவில் வசிக்கும் அவர்களது புதல்வி அவர்களைத் தன்னிடம் அனுப்பி வைக்க வேண்டும் என இலங்கை அரசைக் கேட்டு எவ்வளவோ முயற்சித்தும் அந்தக் கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த நிலையில் 6-01-2010ஆம் ஆண்டு தனது 86 ஆவது அகவையில் வேலுப்பிள்ளை ஐயா உடல்நலக் குறைவு காரணமாக வைத்தியசாலையில் இறந்து விட்டதாக அரசாங்கம் அறிவித்தது.

அடிப்படை மனித உரிமை விதிகளுக்கு முரணாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை என்ற ஒரே காரணத்துக்காக கைது செய்யப்பட்டு மனித நேயமற்ற முறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளையிலேயே இந்த 'மாதந்தை'யின் உயிர் பிரிந்துள்ளது. ஈழத்தமிழினத்தின் சோக சரிதங்களுக்குள் ஒன்றாக இந்தப் பெருமகனின் சாவும் அமைந்து விட்டது. உலகத்தமிழினத்தின் அன்புத் தந்தை இந்த உலகை விட்டுப் பிரிந்தாலும் வரலாற்றில் "மாதந்தையாக" நிரந்தரமாக என்றும் நிலைத்து வாழ்வார்.

- ஈழம் ரஞ்சன்

# விலகத் தேவையில்லை!

## ரணிலுக்கு சந்திரிகா ஆதரவு



கொழும்பு, ஜன. 08

ஜனாதிபதியும் பிரதமரும் ஒன்றிணைந்து மத்திய வங்கி முறி மோசடி தொடர்பில் தீர்வு காண்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், பிரதமர் நியமனம் செய்தவர் திருடினார் என்பதற்காக பிரதமரைக் குற்றம் பிடிக்க முடியாது எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் இதனைக் கூறினார்.

பிரதமர் நியமித்தவர் திருடினார் என்பதற்கு பிரதமர் பொறுப்புக் கூறக் கடமைப்பட்டுள்ளார் தான். அதற்காக பிரதமர் அவருடன் சேர்ந்து திருடினார் என ஆகிவிடாது. இவ்வாறிருக்கையில், பிரதமர் ஏன் பதவி விலக வேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

மகிந்த ராஜபக்சவின் காலத்தில் இதுபோன்ற எந்தவொரு விசாரணையும் இடம்பெறவுமில்லை. குற்றவாளிகள் கண்டறியப்படவுமில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

## இன்றைய கேலிச்சித்திரம்



# தொடர்ச்சிகள்

### போராட்டம்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய விடுதலைக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான ஈ.பி.ஆர்.எல்.எவ்பின் தலைவரான சுரேஸ் பிறேமச்சந்திரன்.

வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேச சபையில் கிடாச்சூரி வட்டாரத்தில் போட்டியிடும் அ.அருந்தவராசாவை ஆதரித்துப் பேசிய கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தமிழ் மக்களுக்கு சரியான தீர்வு வேண்டும் என்பதற்காக தமிழ் மக்களாகிய நீங்கள் உடைமைகளை, உறவுகளை இழந்திருக்கின்றீர்கள். சுமந்திரன் என்ற நபருக்கு வடக்கு, கிழக்கைப் பற்றி, போராட்டத்தைப் பற்றி, அதன் வலிகளைப் பற்றி என்ன தெரியும்? கொழும்பில் பிறந்து, வளர்ந்து, படித்து அங்கேயே உத்தியோகம் பார்த்த ஒருவருக்கு இந்த வலிகள் புரியுமா?

இதனால் தான், அவரது செயற்பாடுகள் தமிழர்களுக்கு விரோதமாக உள்ளன.

அவர் தற்போது கூறுகின்றார் இடைக்கால அறிக்கையில் நாம் அரைவாசித் தூரம் போய்விட்டோம். மிகுதி அரைவாசித் தூரம் போக வேண்டுமாக இருந்தால் நீங்கள் எங்களுக்கு ஆணை தரவேண்டும் என்று. அது இல்லாத ஒன்றுக்கான ஆணை.

இடைக்கால அறிக்கை என்பது தமிழ் மக்களை குழிதோண்டிப் புதைக்கக்கூடிய விடயம் என்பதை புரிந்துகொண்டு அதற்கு ஆணை கேட்கின்றார். நீங்கள் வீட்டுக்குப் போடும் புள்ளடி நாங்கள் எங்களைக் குழிதோண்டி புதைப்பதற்கான ஆணை. தந்தை செல்வாவின் சின்னம் வீடாக இருக்கலாம்.

தமிழர் விடுதலைக் கூட்டணி வந்த பின்னர் உதய சூரியனாக இருக்கலாம். அது சில காலம் முடக்கப்பட்டதால் மீண்டும் வீட்டுக்குப் போகலாம். ஆனால் நாம் இங்கு பார்க்க வேண்டியது கொள்கை ரீதியாக எமது தீர்வை படிப்படியாகவேனும் பெற்றுக்கொள்ள போகின்றோமா இல்லையேல் எங்களை ஒட்டுமொத்தமாக விலைபேசி விற்கப்போகின்றோமா? என்பதையே - என்றார். (ச - 70)

### என் மீது... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லை விடுத்து அதற்குள் வேறு ஒரு சொல்லைப் புகுத்தி வேண்டுமென்றே பொய்யைப் பிரசுரிக்கின்றன. ஊடகங்களுடன் சண்டை பிடித்துக் கொண்டும் தேர்தலில் எம்மால் வெற்றி பெற முடியும். இதை ஊடகங்கள் தெரிந்து கொண்டு விஷமத்தனமான காரியங்களில் ஈடுபடக்கூடாது."

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் இப்படித் தெரிவித்திருக்கிறார்.

மேலும், "இந்தத் தேர்தலில் நாம் போட்டியிடும் அனைத்து சபைகளிலும் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. அதற்கான மக்கள் ஆதரவு கட்சிக்கு உண்டு. மக்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் கூறும் வகையில் விளக்கங்களை தெளிவாக கூறி வருகின்றோம். இந்தத் தேர்தல் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மக்கள் ஆர்வத்தை வெளிக் கொணர்வதாக இருக்கும். தெற்கில் நிலையற்ற சூழல் இடம்பெற்றுக் கொண்டிருக்கிறது. எமது பக்கத்தில் நாம் திடமாக உள்ளோம் - எந்தத் தவறும் இடம்பெறவில்லை. எமது மக்கள் ஒருமித்து நிற்கிறார்கள் என்ற செய்தி இந்த தேர்தலின் மூலம் வர வேண்டும்.

எமது மக்களுக்கு நாம் துரோகம் இழைக்கவும் இல்லை. அடிப்படை நிலைப்பாட்டில் இருந்து நாம் மாறவும் இல்லை. எமது இனத்தின் பூரண விடியலுக்கான பொறுப்பு ஒவ்வொரு வேட்பாளர்களுடைய கைகளிலும் கொடுக்கப்பட்டுள்ளது." - என்றார்.

நேற்று மாலை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் வேட்பாளர்களுடனான சந்திப்பிலேயே அவர் இவற்றைக் கூறினார். (ச-06)

### மாவீரர்களின்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வ.அன்னலக்ஷ்மி.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வேட்பு மனு நிராகரிக்கப்பட்ட சுயேச்சைக் குழுவின் தலைவியே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அவர் நடத்திய ஊடக சந்திப்பு கிளிநொச்சி சோலை வனத்தில் இடம்பெற்றது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், புனர்வாழ்வின் பின் விடுவிக்கப்பட்ட முன்னாள் போராளிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எந்தவொரு அரசியல் தலைவரும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் சாடினார். (ச)

### பட்டம் விட்ட... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாஸ்கரன் தர்சன் (வயது 18) என்பவரே உயிரிழந்தார்.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது உயிரிழந்த இளைஞர் நண்பர்களுடன் சேர்ந்து வயல் வெளியில் பட்டம் விட்டுள்ளார். இரவில் ஒளிர்வதற்காகப் பட்டத்திலும் அதன் வாலிலும் மின்குமிழ்களைப் பொருத்தியுள்ளனர். அவை ஒளிர்வதற்காக மின்சாரம் வழங்க நூலுடன் மின் வடம் ஒன்றையும் இணைத்துள்ளார்.

பட்டம் உயர எழுந்தபோது வீதியிலுள்ள மின் கம்பியுடன் உரசியுள்ளது. இதன்போது மின்சாரம் பாய்ந்து பட்டம் ஏற்றிக் கொண்டிருந்த இளைஞர் தூக்கி எறியப்பட்டார். நண்பர்கள் அவரை உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டபோது வழியிலேயே உயிரிழந்தார். (ச)

### நாடாளுமன்றை.. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் 70 ஆவது சம்மேளனக் கூட்டம் கொழும்பு கேம்பல் பார்க் மைதானத்தில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் தெரிவித்தவை வருமாறு-

மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் நாம் நேர்மையாக நடந்துகொண்டோம். இதை விசாரிப்பதற்காக குழு அமைத்து அந்தக் குழுவின் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்தோம். இந்த விவகாரத்தை கோப் குழுவிடமும் பாரம் கொடுத்தோம். அந்த அறிக்கையை சட்ட மா அதிபரிடம் ஒப்படைத்து அது தொடர்பில் எடுக்கப்பட வேண்டிய சட்ட நடவடிக்கைகள் என்னென்று சிபாரிசு செய்யுமாறு அவரிடம் கேட்டிருந்தேன். பிணைமுறி மோசடியுடன் தொடர்புபட்ட பெர் பாச்சுவல் நிறுவனம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று மத்திய வங்கி ஆளுநர் கூறியபோது அதற்கு நான் அனுமதி வழங்கினேன்.

இது தொடர்பில் ஆணைக்குழு ஒன்றை அமைப்பதற்கு ஜனாதிபதி முடிவெடுத்தபோது நான் அதற்கு பூரண ஆதரவை வழங்கினேன். அந்த ஆணைக்குழு முன்பாக முன்னிலையாகி சாட்சியமளித்தேன். அந்த ஆணைக்குழுவின் அறிக்கை இப்போது ஜனாதிபதியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் விவாதம் நடத்த நாடாளுமன்றத்தைக் கூட்டுமாறு கட்சிகள் பல கோரியுள்ளன. நானும் அதற்கு உடன்படுகிறேன். நாடாளுமன்றத்தை உடன் கூட்டுமாறு நான் சபாநாயகரிடம் உத்தரவிட்டுள்ளேன்.

அந்த விவாதத்தில் இந்தப் பிணை முறி மோசடி மூலம் கொள்ளையிடப்பட்ட 10 பில்லியன் ரூபா பற்றியும் பேசுவோம். மஹிந்த காலத்தில் கொள்ளையிடப்பட்ட இதைவிடப் பல மடங்கு அதிகமான தொகை பற்றியும் பேசுவோம். 10 ஆயிரம் பில்லியன் கடனை மஹிந்த எமது தலையில் சுமத்திவிட்டுச் சென்றமை பற்றியும் பேசுவோம்.

நாட்டின் அதிகாரத்தை வென்றுவிட்டோம். அந்த அதிகாரத்தைத் தக்க வைப்பதற்காகவும் கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்காகவும் எதிர்கால சந்ததியினருக்கு கல்வி மற்றும் தொழில்களை வழங்குவதற்காகவும் நாம் உள்ளூராட்சி சபைகளின் அதிகாரங்களை கைப்பற்றியே ஆக வேண்டும். எமது இரண்டு வருட ஆட்சியில் அதிகளவிலான அபிவிருத்திகளை செய்துள்ளோம். மீதிக்காலத்தில் செய்ய இன்னும் அதிகமான அபிவிருத்தித் திட்டங்கள் எம்மிடம் உள்ளன. இவற்றை செவ்வனே நிறைவேற்றக் கிராம அதிகாரங்கள் எமக்குத் தேவை. சர்வதேசத்தின் உதவிகள் எமக்கு அதிகம் இருப்பதால் எம்மால் மிகவும் இலகுவாக அபிவிருத்திப் பணிகளைச் செய்ய முடியும்.

யாழ்ப்பாணத்தில் பொருளாதார மையங்களையும், கிழக்கு மாகாணத்தில் சுற்றுலா வலயங்களையும் ஏற்படுத்தவுள்ளோம். மருந்துப் பொருட்களின் விலைகளை குறைத்துள்ளோம். வைத்தியசாலைகளின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளோம். அரச தொழில்களால் மாத்திரம் வேலையில்லா பிரச்சினைகளை தீர்க்க முடியாது. தனியார் துறையிலும் தொழில்கள் அதிகரிக்கப்பட வேண்டும். இதற்காகவே நாம் தொழிற்சாலைகளையும் தொழில் வலயங்களையும் அமைக்கவுள்ளோம். சுயதொழில் முயற்சிக்காக கடன்களையும் வழங்குவோம் - என்றார். (ச-01)

### தீர்வு மாயையைக்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்புக்கே உண்டு. அந்த நிலை பெப்ரவரி 10 இற்குப் பின்னர் சரிந்தால் நிலைமை வேறாகும். கூட்டமைப்புக்கான மக்களின் ஆணை சரிந்துவிட்டது என்ற செய்தி வருமாகவிருந்தால் புதிய அரசியலமைப்பை நிறைவேற்ற முடியாது" என சுமந்திரன் எம்.பி. தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக்கும் விதமாகவே சுகாஷ் மேற்படி கருத்தை வெளிப்படுத்தினார்.

"தமிழ் தேசிய கூட்டமைப்பின் சரிவு தொடர்பில் அந்தக் கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் உணர்கிறார். அதே நேரம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் எழுச்சியைக் கண்டு அவர் அச்சமடைந்துள்ளார். அவரால் கூறப்படும் அரசியலமைப்பு மாற்றத்தை யார் ஏற்றுக்கொண்டது? சமஷ்டி இல்லை - வடக்கு, கிழக்கு இணைப்பில்லை - பௌத்த மதத்துக்கே முன்னுரிமை ஆகிய விடயங்களைக் கொண்ட புதிய அரசியலமைப்பை மக்கள் ஏற்கமாட்டார்கள். மக்களைத் திரட்டி அதற்கு எதிராகப் போராடுவோம்" என்று சட்டத்தரணி சுகாஷ் மேலும் கூறினார்.

### பொறுப்பில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க நாட்டின் பணத்தை சரியான முறையில் முகாமைத்துவம் செய்யத் தவறிவிட்டார். குறிப்பிட்ட ஒரு நிறுவனத்துக்கு மாத்திரம் சார்ப்பாக நடந்துகொண்டுள்ளார் எனவும் தெரிவித்தார். அத்துடன் பிரதமரின் கீழ் இருக்கும் நிறுவனத்தில் இவ்வாறு பெரும் மோசடி இடம்பெறுவதை தடுக்க அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

நிதி மோசடி தொடர்பில் பிரதமருக்கு குற்றச்சாட்டு இல்லாவிட்டாலும் அவர் தனது பொறுப்பை நிறைவேற்ற தவறியுள்ளார். அத்துடன் பிரதமர் இந்த விசாரணையை முன்கொண்டு செல்லாமல் தடுப்பதற்கும் நடவடிக்கை எடுத்து வந்தார்.

இதேவேளை, அதிகமானவர்களின் எதிர்ப்புக்கு மத்தியில் அர்ஜூன மஹேந்திரனை அந்த பதவிக்கு நியமித்த ஜனாதிபதியும் பொறுப்பு கூறவேண்டும் - என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-01)

### சுதந்திர... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை சுதந்திரம் பெற்ற நாளான வரும் பெப்ரவரி 04 ஆம் திகதி, காலிமுகத்திடலில் பிரதான அணி வகுப்பு மற்றும் நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகப் பங்கேற்க பிரித்தானிய மகாராணியின் சார்பில் அவரின் இளைய மகன் இளவரசர் எட்வேர்ட்டுக்கு வெளிவிவகார அமைச்சின் மூலம் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பை அவர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு இன்னும் இரண்டு வாரங்களில் வெளியிடப்படும்.

இலங்கையின் 50 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் பிரித்தானிய மகாராணியின் பிரதிநிதியாக, அவரின் மூத்த மகன் இளவரசர் சார்ள்ஸ் பிரதம விருந்தினராகப் பங்கேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தவிர, ஜப்பான், தாய்லாந்து ஆகிய நாடுகளின் அரச குடும்பத்தினருக்கும் இம்முறை சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்க அழைப்புகள் விடுக்கப்பட்டுள்ளன. (ச)

# ‘ட்ரம்புக்கு விசர்’ நூலுக்கு மவுசு




வோஷிங்டன், ஜன.08

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் பற்றி பத்திரிக்கையாளர் மிச்சேல் வுல்ஃப் எழுதியுள்ள சர்ச்சைக்குரிய புத்தகம் நேற்று வெளியிடப்பட்டது. கடைகளில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து இந்தப் புத்தகத்தை வாங்கிச் சென்றனர்.

அமெரிக்கப் பத்திரிக்கையாளர் மிச்சேல் வுல்ஃப், அதிபர் ட்ரம்ப் பற்றி புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். ‘நெருப்பும் சீற்றமும் - டிரம்பின் வெள்ளை மாளிகைக்குள்’ என்ற அந்த புத்தகத்தில் ‘ட்ரம்புக்கு மனநோய் உள்ளது’ என்பது போன்ற பல்வேறு சர்ச்சைக்குரிய கருத்துக்களைக் கூறியுள்ளார்.

இந்தப் புத்தகம் அமெரிக்காவில் நேற்று வெளியிடப்பட்டது. இதனை வெளியிடாமல் தடுக்கும் பொருட்டு சட்ட நடவடிக்கை எடுக்க ட்ரம்ப் உத்தரவிட்டு இருந்தார். இதற்கான நடவடிக்கைகளில் அவரது வழக்கறிஞர்கள் ஈடுபட்டு வந்தனர். எனினும் அது வெற்றி பெறவில்லை.

திட்டமிட்டபடி, அந்தப் புத்தகம் நேற்று வெளியிடப்பட்டது. அமெரிக்காவின் பல்வேறு புத்தகக் கடைகளிலும் இந்தப் புத்தகம் அதிகளவில் விற்பனையானது. வோஷிங்டனில் பல கடைகளிலும் நள்ளிரவு வரை மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்து புத்தகத்தை வாங்கிச் சென்றனர். இதனிடையே அந்தப் புத்தகத்தில் இடம் பெற்றுள்ள அனைத்தும் உண்மைக்கு மாறானவை என, வெள்ளை மாளிகையின் செய்தித் தொடர்பாளர் சாரா சாண்டர்ஸ் தெரிவித்துள்ளார்.(இ)



# காரில் தொங்கிய மனிதத் தலைகள்

மெக்சிக்கோ, ஜன.08

மெக்சிக்கோ நாட்டில் வெராகுரூஸ் நகர பகுதியில் சாலையில் ஒதுக்குப்புறமாக நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்றில் துண்டிக்கப்பட்ட மனித தலைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த காரின் முன்புறம் இயந்திர மூடியின் மேல் துண்டிக்கப்பட்ட 5 மனித தலைகள் இருப்பதைக் கண்ட அந்தப் பகுதி மக்கள் உடனடியாகப் பொலிஸாருக்குத் தகவல் அளித்தனர். தகவலறிந்து விரைந்து வந்த பொலிஸார் சம்பவப் பகுதியில் விசாரணை மேற்கொண்டுள்ளனர். இதில் அந்தக் காருக்குள் பிளாஸ்டிக் பைகளில் துண்டிக்கப்பட்ட மனித தலைகளுக்கு உரித்தான உடல்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்ததையும் கண்டுபிடித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாகப் பொலிஸார் விசாரணையை முடுக்கி விட்டுள்ளனர்.

மெக்சிக்கோவின் தேசிய பொதுப் பாதுகாப்பு அமைப்பு வெளியிட்டுள்ள புள்ளி விவரப்படி, வெராகுரூஸ் பகுதியில் நடக்கின்ற கொலைகளில் 70 சதவீத கொலைகள், பாதாள உலகக் கும்பல்கள் நடத்துவதுதான் என்பது தெரிய வந்துள்ளது. அதே நேரத்தில் அத்தகைய கும்பல்கள் பலவற்றை கலைத்து விட்டதாக மெக்சிகோ அரசு தரப்பில் கூறப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# யார் இசையமைப்பாளர்?

சென்னை, ஜன.08

விஸ்வாசம் படம் இன்னும் சில தினங்களில் தொடங்கவுள்ளது. அஜித் நடிக்கின்றார் சிவா இயக்குகின்றார் என்பதைத் தவிர இந்தப் படத்தைப் பற்றி எந்த ஒரு தகவலும் இல்லை.

யுவன் இப்படத்தில் ஒப்பந்தமாகி விலகியதாகவும் கிசுகிசுக்கப்பட்டது. இந்த நிலையில் இப்படத்தில் விக்ரம் வேதா இசையமைப்பாளர் சாம் பணியாற்றவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சாம், ‘நான் விஸ்வாசத்தில் இருக்கிறேனா? என்று தெரியவில்லை, ஆனால், இருந்தால் நன்றாக இருக்கும்’ என கூற ரசிகர்கள் செம குஷியாகிவிட்டனர்.

மேலும், தானும் ஒரு அஜித் ரசிகன், அவருக்காக நிறைய பிஜிஎம் வைத்துள்ளேன் என்று கூறியுள்ளார். (இ)

# தாயைக் கொன்ற தனயன்



குஜராத், ஜன.08

குஜராத்தைச் சேர்ந்த இளம் பேராசிரியர் ஒருவர், உடல்நிலை சரியில்லாத தனது தாயை மாடியிலிருந்து கீழே தள்ளி கொலை செய்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட் மாவட்டத்தைச் சேர்ந்தவர் சந்தீப் நத்வானி (வயது - 35) என்பவர் ராஜ்கோட் கலை அறிவியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். இவரது தாயார் ஜெய்ஸ்ரீ நத்வானி (வயது- 64), தமது மகனின் வீட்டிலேயே வசித்தார். ஜெய்ஸ்ரீக்கு அண்மையில் மூளைப் பக்கவாதம் ஏற்பட்டுள்ளது. இதனால், நடக்க முடியாத நிலைக்கு ஆளானார். இதன் காரணமாக, தமது தாயாரின் அன்றாடப் பணிகள் அனைத்தையும் சந்தீப் நத்வானியே செய்து வந்தார். இதனால் ஒரு கட்டத்தில் வெறுப்படைந்த அவர், தமது தாயைக் கொலை செய்யத் தீர்மானித்தார்.

அதன்படி, கடந்த ஆண்டு செப்ரெம்பர் 27ஆம் திகதி, தான் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்பின் 4 ஆவது தளத்துக்கு தாயைக் கொண்டு சென்ற சந்தீப், அங்கிருந்து அவரைக் கீழே தள்ளிவிட்டார். இதில், அவரது தாயார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து, தனது தாயார் மாடியிலிருந்து தவறி விழுந்து விட்டதாக பொலிஸ் நிலையத்தில் சந்தீப் தெரிவித்தார். பொலிஸாரும் அவரது கூற்றை நம்பி வழக்கை தற்கொலை என்று முடித்துக்கொண்டனர்.

மூன்று மாதங்கள் கழிந்த நிலையில், இந்த வழக்குப் பதிவான ராமேஸ்வர் பார்க் பொலிஸ் நிலையத்துக்கு கடந்த வாரம் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. அதில் பேசிய மர்மநபர், மேற்குறிப்பிட்ட நிகழ்வு ஒரு கொலை எனக் கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்துள்ளார். சந்தேகமடைந்த பொலிஸார் சந்தீப் வீடு அமைந்துள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி கேமராவில் பதிவான காட்சிகளை ஆய்வு செய்தனர்.

அப்போது, சந்தீப் தமது தாயாரை மேல் தளத்துக்கு அழைத்துச் செல்வதும், பின்னர் தாயார் இல்லாமல் அவர் ‘தனியாக இறங்கும் காட்சிகள் பதிவாகியிருந்தன. அதன்பின், தமது தாயாரைக் கொலை செய்ததை சந்தீப் ஒப்புக்கொண்டார்.(இ)

# உணர் திறனுள்ள செயற்கை ‘கை’

இத்தாலிப் பெண்ணுக்கு பொருத்தப்பட்டது



ரோம், ஜன.08

உலகிலேயே முதல் முறையாக, தொடும் பொருட்களை உணரும் தன்மையுடைய செயற்கை கை ஒன்றை உயிர்மின்னணுவியல் தொழில்நுட்பம் மூலம் இத்தாலியில் உள்ள அறிவியலாளர்கள் உருவாக்கியுள்ளனர்.

சுமார் கால் நூற்றாண்டுகளுக்கு முன்பு நடந்த வாகன விபத்து ஒன்றில் தனது இடது கையை இழந்த அல்மரினா மஸ்கரெல்லோ எனும் பெண்மணிக்கு அந்தக் ‘கை’ பொருத்தப்பட்டுள்ளது. “இழந்த கை மீண்டும் கிடைத்ததை போல் உள்ளது,” என்று அவர் கூறியுள்ளார்.

இந்தக் கையை உருவாக்கிய இதே ஆராய்ச்சியாளர்கள் குழுவினர், கடந்த 2014-ஆம் ஆண்டிலேயே தொடு உணர்வு உள்ள செயற்கைக் கை ஒன்றை உருவாக்கினார்கள்.

எனினும், அந்தக் கையுடன் பொருத்தப்பட்டிருந்த தொடு உணர்வை உள்வாங்கும் கருவி (சென்சார்) மற்றும் கணிப்பொறி ஆகியன அளவில் பெரியதாக இருந்ததால், அதை ஆய்வகத்துக்கு வெளியில், அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் சாத்தியங்கள் இல்லாமல் போனது.

அதே கருவிகளை ஒரு தோள் பையில் சுமந்து செல்லும் அளவுக்கு சிறிய அளவில் தற்போது உருவாக்கியுள்ளனர் அந்தக் குழுவினர்.

இத்தாலி, சுவிட்சர்லாந்து மற்றும் ஜெர்மனி ஆகிய நாடுகளைச் சேர்ந்த பொறியியாலாளர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள், நரம்பியல் வல்லுநர்கள், மின்னணுவியல் மற்றும் ரோபோடிக் வல்லுநர்கள் அந்தக் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

அந்த செயற்கைக் கையால் தொடப்படும் பொருள் மென்மையானதா, வன்மையானதா என்பதை அறியும் உணர் கருவி அத்துடன் பொருத்தப்பட்டுள்ளது. (இ)

# 11 இளவரசர்கள் சிறைக்குள்!



ரியாட், ஜன.08

சவுதி மன்னர் அரண்மனையின் முன் போராட்டத்தில் ஈடுபட்ட சவுதி இளவரசர்கள் 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

“சவுதியில் மன்னரின் அரண்மனைக்கு முன் போராட்டத்தில் ஈடுபட்ட 11 சவுதி இளவரசர்கள், பொலிஸார் விலகச் சொல்லியும் அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்ததால் கைது செய்யப்பட்டனர்” என்று அரச தரப்பில் கூறப்பட்டுள்ளது.

இளவரசர்களின் போராட்டத்துக்கான உண்மையான காரணம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

எனினும் சவுதி இளவரசர்களுக்கு மின்சாரம் மற்றும் தண்ணீர் தொடர்பான கட்டணத்தை இனிமேல் அரசாங்கம் செலுத்தாது என்று சவுதி அரசர் கூறியிருந்தார். இதனைத் திரும்பப் பெறவும் கொலை வழக்கில் தண்டனை பெற்ற இளவரசர் ஒருவரது இழப்பீடு குறித்துமே அந்த 11 இளவரசர்களும் போராட்டத்தில் ஈடுபட்டதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வளைகுடா நாடுகளில் ஒன்றான சவுதி அரேபியாவில் சென்ற ஆண்டு முதல் மன்னர் சல்மான் பின் அப்துலஜீஸ் அல் சவுதாலால் சீர்திருத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

சவுதி அரேபியாவின் 11 மூத்த இளவரசர்கள், அமைச்சர்கள் மற்றும் முக்கிய பெருந்தொழில் அதிபர்கள் உட்பட 38 பேர் மீது ஊழல் புகார் சுமத்தப்பட்டு கைது செய்யப்பட்டனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ)

# அரையிறுதியில் அதிர்ச்சி!



சீனாவில் நடைபெற்று வரும் டென்னிஸ் தொடரில், அரையிறுதியில் தோல்வியடைந்த முன்னணி டென்னிஸ் வீராங்கனையான ஷரபோவா வெளியேறினார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதியாட்டம் ஒன்றில், ரஷ்ய வீராங்கனையான மரியா ஷரபோவா, செக்குடியரசின் கத்ரினா சினியாகோவா ஆகியோர் மோதினார்.

ஆட்டத்தின் முதல் சுற்றை 2:6 என்ற புள்ளிக் கணக்கில் பறிகொடுத்த ஷரபோவா, இரண்டாவது சுற்றை 6:3 என்ற புள்ளிக் கணக்கில் தனதாக்கினார்.

வெற்றியாளரைத் தீர்மானிக்கும் மூன்றாவது சுற்றிலும் ஷரபோவா சறுக்கினார். அந்தச் சுற்றை 3:6 என்ற புள்ளிக் கணக்கில் பறிகொடுத்த அவர், 1:2 என்ற சுற்றுக் கணக்கில் தோற்று, அரையிறுதியுடன் வெளியேறினார். வெற்றி பெற்ற கினியோகோவா இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றார். (ஐ)

# ரபாடாவுக்கு ஓர் உம்மா



தென்னாபிரிக்க அணியின் தலைவர் டூபிலிசிஸ், வேகப்பந்து வீச்சாளர் ரபாடாவுக்கு முத்தக் கொடுக்கும புகைப்படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகப் பரவி வருகிறது.

தென்னாபிரிக்க அணிக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில், அந்த அணிக்குப் பெரிதும் தொந்தரவாக இருந்தவர் இந்திய அணியின் சகலதுறை வீரரான ஹார்திக் பாண்ட்யா,

ஏனெனில், இந்திய அணி 150 ஓட்டங்களுக்குள் சுருண்டுவிடும் என்று எதிர்பார்க்கப்பட்டபோது, ஹார்திக் பாண்ட்யா 97 ஓட்டங்கள் குவித்தார். பின்னர் வேகப்பந்து வீச்சாளர் காகிசோ ரபாடா அவரை வெளியேற்றினார்.

இந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் விதமாக தென்னாபிரிக்கா அணியின் தலைவர் டூபிலிசிஸ், ரபாடாவுக்கு தலையில் முத்தம் கொடுத்தார். இதை அவரது ரசிகர்கள் டிரண்டாக்கி வருகின்றனர். (ஐ)

# விளையாடியது மழை

கேப்டவுன், ஜன.08

இந்திய-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் கடும் மழை காரணமாகக் கைவிடப்பட்டது.

தென்னாபிரிக்கா 2 ஆவது நாள் ஆட்ட முடிவில் 2 விக்கெட் இழப்புக்கு 65 ஓட்டங்கள் எடுத்திருந்தது. அம்லா 4 ஓட்டங்களும், ரபாடா 2 ஓட்டங்களும் எடுத்துக் களத்தில் இருந்தனர். இதனால் தென்னாபிரிக்கா 142 ஓட்டங்களால் முன்னிலை பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் முதல் கேப் டவுனில் கடும் மழை விட்டு விட்டுப் பெய்ததால் ஆட்டம் தொடங்குவதில் சிரமம் ஏற்பட்டது.

மதிய உணவு இடைவேளைக்குப்பின் ஆட்டம் தொடங்க வாய்ப்பு இருந்த நிலையில் மீண்டும் மழை குறுக்கிட்டது. பின்னரும் ஆட்டம் தொடங்குவதற்கான சூழ்நிலை ஏற்படவில்லை. இதனால் நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டம் கைவிடப்படுவதாக நடுவர்கள் அறிவித்தனர்.

இன்று வழக்கம்போல் உள்ளூர் நேரப்படி காலை 10.30 மணிக்கு ஆட்டம் தொடங்கும் என்றும், 4 ஆவது நாள் மற்றும் 5 ஆவது நாளில் 98 ஓவர்கள் வீசப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. (அ)

# மார்ஷ் சகோதரர்கள் மிரட்டல்!



சிட்னி, ஜன. 08

ஆஷஸ் இறுதி டெஸ்ட் போட்டியில் மார்ஷ் சகோதரர்களின் மிரட்டல் ஆட்டத்தால் அவுஸ்திரேலியா 649 ரன்கள் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்து போராடி வருகிறது.

அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிக்கிடையிலான ஆஷஸ் தொடரின் 5ஆவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி சிட்னியில் நடைபெற்று வருகிறது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 346 ஓட்டங்களைக் குவித்தது. பின்னர் முதல் இன்னிங்ஸை விளையாடிய அவுஸ்திரேலியா நேற்று முன்தினம் 3ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்புக்கு 479 ஓட்டங்களைச் சேர்த்திருந்தது.

ஷேன் மார்ஷ் 98 ஓட்டங்களுடனும், மிட்சல் மார்ஷ் 63 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். நேற்று 4ஆவது நாள் ஆட்டம் நடந்தது.

மார்ஷ் சகோதரர்கள் மிகச் சிறப்பாக விளையாடி சதம் அடித்தனர். ஷேன் மார்ஷ் முதலில் சதம் அடித்தார். அவர் 212 பந்துகளில் 11 பௌண்டரிகள் அடங்கலாக 100 ஓட்டங்களைத் தொட்டார்.

அவரைத் தொடர்ந்து அவரது சகோதரர் மிட்சல் மார்ஷ் சதம் அடித்தார். அவர் 140 பந்துகளில் 15 பௌண்டரிகள், 2 சிக்ஸர்களுடன் 100 ஓட்டங்களைத் தொட்டார். பின்னர் மிட்சல் மார்ஷ் 101 ஓட்டங்களுடனும், ஷேன் மார்ஷ் 156 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

மார்ஷ் சகோதரர்களின் அபாரமான ஆட்டத்தால் அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 649 ஓட்டங்களைக் குவித்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. விக்கெட் காப்பாளர் பெய்ன் 38 ஓட்டங்களுடன் களத்தில் நின்றார்.

பின்னர் 303 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸைத் தொடங்கியது. ஸ்டோன்மேன் ஓட்டம் எதுவும் சேர்க்காமலும், குக் 10 ஓட்டங்களுடனும், வின்ஸ் 18 ஓட்டங்களுடனும், தாவித் மலன் 5 ஓட்டங்களுடனும் வெளியேறினர்.

பின்னர் 5ஆவது விக்கெட்டுக்காக ஜோ ரூட்டுடன் விக்கெட் காப்பாளர் பேர்ஸ்டோவ் ஜோடி சேர்ந்தார். இந்த ஜோடி 4ஆவது நாள் ஆட்டம் முடியும் வரை மேலும் விக்கெட் இழக்காமல் பார்த்துக் கொண்டது. இங்கிலாந்து 4ஆவது நாள் ஆட்ட முடிவில் 4 விக்கெட்டுகள் இழப்பிற்கு 93 ஓட்டங்கள் சேர்த்துள்ளது. ஜோ ரூட் 42 ஓட்டங்களுடனும், பேர்ஸ்டோவ் 17 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க இங்கிலாந்துக்கு இன்னும் 210 ஓட்டங்கள் தேவைப்படுகிறது. இங்கிலாந்துக்கு தோல்வி அல்லது சமநிலை என்ற இரு வாய்ப்புக்கள் மட்டுமே உள்ளது. (ஐ)

# அரையிறுதியில் கலைமதி



நாச்சிமார் கோவிலடி ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழகம் நடத்தி வரும் உதைபந்தாட்டத் தொடரில், நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில் கலைமதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்த ஆட்டத்தில், வதிரி டயமன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட கலைமதி விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)

# அராலி உதைபந்தாட்டம்: குறிஞ்சிக்குமரன் அசத்தல்

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் உழவர் விழா கிண்ண உதைபந்தாட்டத் தொடரில், நேற்றைய ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

அராலி மாவத்தை வி.கழகம் வலிகாமம் லீக் அணிகளுக்கிடையில் 11 பேர் கொண்ட உதைபந்தாட்டத் தொடரை நடத்தி வருகிறது.

இதில், நேற்று நடைபெற்ற ஆட்டம் ஒன்றில், குப்பிளான் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழகம் மோதியது.

இந்த ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ஐ)



இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 08.01.2018 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.